
॥ குண்டலினி அந்தாதி ॥

(யோகத்தின் திறவுகோல்)

மணித்வீபம்

ஸ்ரீ க்ருபானந்தநாதன்


வந்தே குரு பரம்பராம்

முன்னுரை

ஸ்ரீமாத்ரே நம:

அகார உகார மகாரமாய் விளங்கும் பரம் பொருள்! நம்முள்ளே இருப்பதை அறிந்து செய்யும் தவமே தவம். அப்படியிருக்க நம்முள் ஆன்ம ஜோதியாக சுடரொளி வீசிப் பாய்ந்தொளிரும் ஆத்ம ஶக்தியாக விளங்கும் 'குண்டலினி' ஶக்தியை புரிந்து ஆரதிப்பது நம் தலையாய கடமையாகும்.

உய்ய ஓர் வழி உள்ளொளி காண்பதே! எனும் வார்த்தையை அடியேன் எப்போதும் குருவருளால் நினைவில் இருத்தி வைத்தக் காரணத்தால், அவரருளாலே! எளியேன் அறிந்த சிறு தமிழை வைத்து நீண்ட நாளாக ஓர் 'அந்தாதி' செய்ய வேண்டும் எனும் எண்ணம் இருந்த நிலையில்; அதை இதற்கான சாதனமாக மாற்றிக்கொடுத்து குருவருள்தான். இதுவரையில் குருவருளால் யாம் அறிந்து பயின்ற அனுபவங்களை, புரிதல்களை வார்த்தைகளாக அமைக்க முற்பட்டுள்ளோம். இதில் இருக்கும் நிறை மொத்தமும் குருவருளை மட்டுமே சேரும்.

எளியேனின் இச்சிறு முயர்ச்சியில் ஏதும் பிழையிருப்பின் பெரியோர்கள் பிழைப் பொருக்க வேண்டுகிறோம்.

மணீத்வீபம்
ஸ்ரீ க்ருபானந்தநாதன்

நாள்: 06/02/2026
இடம்: ஸ்ரீநிவாஸபுரி

|| குண்டலினி அந்தாதி ||

|| காப்பு ||

ஆதியாம் சோதியதை மேதினியில் பாடிடவே
அழிவின்றி மலர்ந்த சொற்கள் உலகெலாம் பரவிடவே
அருள்தனில் எழும் நாதம் நற்றமிழால் ஒலித்திடவே
எமையாண்ட குருவே நின் மலர்பதங்கள் பணிகின்றேன்

|| அந்தாதி ||

1. மூலத்தில் மௌனமாய் முடங்கிய ஒளியதுவாய்
சாலத்தில் சுழன்றெழுந்து ஸதாஶிவம் சேர்ந்தவளே
காலத்தில் கரைந்தெழுந்து கலைமகளாய் நின்றவளே
நீலத்தில் நிமிர்ந்தாடும் நெஞ்சமெலாம் ஆளும் நதி

2. நதியெனும் நுண்மையுடன் நரம்பு வழி பாய்ந்தவளே
பதியெனும் பரவசத்தில் பசுமூச்சு சேர்த்தவளே
மதியெனும் மாயைதனை மறைத்தழிக்கும் தீபமதாய்
ஒளிபெற்ற சிந்தைதனில் சாந்தமெனும் தேனவளே

3.தேனவளே தெளிவெனும் சிந்தையதன் நுண்மையிலே
வானவளே வழிதனத்தில் வாடாமல் பாய்ந்தேதான்
ஞானவளும் நரம்பினுக்குள் பானமதாய் பாய்ந்திட்டே
நாதமாய் தோன்றியவள் பாசத்தைத் தகர்க்கின்றாள்

4. பாசமதால் எந்தனையும் பரிசுத்தம் செய்தவளே
வாசமெனும் நரம்பினுக்குள் வாடாமல் பாய்ந்தவளே
தேசமெனும் சிந்தைதனில் தீபமாய் தோன்றிட்டே
நேசமெனும் நெஞ்சமெலாம் நிம்மதியைத் தந்தவளே

5. தந்தவளே தவமெனும் சுடரொளியை நரம்பினுக்குள்
வந்தவளே மனதினுக்குள் மாயைதனை நீக்கியெந்தன்
சிந்தையதன் சுழற்சி வழி தீபமதாய் ஒளிர்ந்தேதான்
ஆட்கொண்டாய் சோதியளே பாபமதை பாழாக்கி

6. பாழாக்கிப் வினையதனை பரவசமும் தந்தவளே
தீயாக்கி வினைதனத்தை வாடாமல் சுட்டவளே
ஊழாக்கி ஒளியதனில் உளமெலாம் அளந்தவளே
தாழாக்கி தவமெழுப்பும் தத்துவமாய் நின்றவளே

7. நின்றவளே நெஞ்சமெலாம் நிம்மதியை ஊற்றிட்டே
சென்றவளே சுழற்சி வழி சிந்தையைத் தூண்டியவள்
பொன்றவளே பாசமெலாம் பூரணமாய் மாற்றியவள்
வினைதனத்தை வென்றிட்டே வீரவிழி காட்டினளே

8. வீர வழி நெஞ்சமெலாம் விழித்தெழுந்த ஒளியதுவே
சூர வழி சுழற்சி நதி சுடரொளியாய் பாய்ந்ததுவே
ஆர வழி அகமெலாம் ஆனந்தம் ஊற்றியதே
தார வழி தவமெழுப்பும் தத்துவமாய் நின்றவளே

9. தத்துவமும் தவமெழுப்பும் நெஞ்சமெலாம் அவளன்றோ
ஊரவழி ஒளியதனில் உளமெலாம் ஆட்கொண்டாள்
சாரவழி சுழற்சி நதி சாந்தமாய் தோன்றியவள்
பாரவழி பரம்பொருளின் பாசத்தை நீக்கியவள்

10. நீக்கியவள் நெஞ்சமெலாம் நிம்மதியை ஊற்றியவள்
தீக்கியவள் சுழற்சி வழி சிந்தையைத் தூண்டியவள்
பாக்கியவள் பரம்பொருளின் பாசத்தை மாற்றியவள்
ஆக்கியவள் அகமெலாம் ஆனந்தம் செய்தவளே

11.செய்தவளே சிந்தைதனில் செம்மைகொண்டு வந்தவளே
எய்தவளே எழுச்சியெனும் இழைதனிலே பாய்ந்தவளே
மௌனமெனும் வெளிச்சத்தில் தோன்றிட்டே எம்முள்ளே
கொய்திட்டே கோபமெலாம் குருதியாய் மாற்றினளே

12. குருதியாய் கோபமெலாம் குளிர்வென மாற்றியவள்
அருதியாய் அகமெலாம் ஆனந்தம் செய்தவளே
மருதியாய் மனதினுக்குள் மௌனத்தை ஊற்றியவள்
திருதியாய் சுழற்சி வழி தீபமாகத் தோன்றியவள்

13. தோன்றியவள் சுழற்சி வழி தூய்மையைச் செய்தவளே
ஊன்றியவள் ஒளியதனில் உளமெலாம் ஆட்கொண்டாள்
கூன்றியவள் கோபமெலாம் குருதியாய் மாற்றியவள்
நீன்றியவள் நெஞ்சமெலாம் நிம்மதியை ஊற்றியவள்

14. ஊற்றியவள் ஒளியதனில் உளம்குளிர செய்தவளே
மாற்றியவள் மாயையெனும் மருளாதனைத் துளையாக்கி
தேற்றியவள் சிந்தைதனில் செம்மையைப் பூத்தவளே
போற்றியவள் பாசமெலாம் பூரணமாய் நீக்கியவள்

15. பூரணமாய் பாசமெலாம் பொசுக்கிடவே வந்தவளே
சீரணமாய் சிந்தைதனில் செம்மையதை நாட்டியவள்
தாரணமாய் தவமெழுப்பும் தத்துவமாய் தோன்றியவள்
வாரணமாய் வழிதனத்தில் வாடாமல் சென்றவளே

16.சென்றவளே சுழற்சி வழி செம்மை கொண்டுவந்தவளே
என்றவளே எழுச்சியெனும் இழைதனில் ஓடியவள்
நின்றவளே நாதமெனும் நரம்பதனில் தோன்றியவள்
துன்றவளே தூய்மையெனும் சுடரொளியாய் வீசினளே

17. வீசினளே வெளிச்சமெனும் வியாபகத் தீபமதை
ஈசனெனும் இமையவர்கும் எட்டாத நாதமது
பாசமெனும் பிணியதனை பாழாக்கி நின்றேதான்
தேசமெலாம் துளிர்க்கவைத்த சுத்தசக்தி ஆனவளே

18. சுத்தசக்தி சூழலெலாம் சுழற்சி நதியாய் பாய்ந்தவளே
முத்தசக்தி மூன்றினையும் மௌனமாய் இணைத்தவளே
பத்தசக்தி பாவமெலாம் பூரணமாய் மாற்றினவள்
சத்தசக்தி சாந்தமெனும் சுடரொளியாய் வீசினளே

19. ஒளிச்சுடராய் சுழற்சி வழி சதாசிவம் காட்டியவள்
காந்தமெனும் கருணையினால் காலத்தை நீக்கியவள்
பாந்தமெனும் பாசமெலாம் பூரணமாய் மாற்றிட்டே
வாந்தமெனும் வினைகளினால் வாடாமல் சிதைத்தனளே

20. சிதைத்தவளே வினைகளெல்லாம் சிந்தையைச் சீராகி
விதைத்தவளே மாயையெனும் மந்தத்தை நீக்கியவள்
பதைத்தவளே பரவசத்தில் பாசத்தை மாற்றியவள்
விதைத்தவளே விழிப்பதனில் வீரமாய் தோன்றினளே

21. தோன்றினளே தவமெனும் தத்துவமாய் நெஞ்சமெலாம்
ஊன்றினளே ஒளியதனில் உளமெலாம் ஆட்கொண்டு
சேர்ந்தவளே சுழற்சி வழி செம்மைகொண்டு வந்தவளே
பெயர்ந்தேதான் பேதமெலாம் பாசமாய் மாற்றினவள்

22. பாசமாய் பேதமெலாம் பரிவெனவேப் பூத்தவளே
தேசமாய் சிந்தைதனில் தீபமாய் நின்றவளே
நேசமாய் நரம்பினுக்குள் நாதமாய் தோன்றியவள்
வாசமாய் வானமெலாம் வாடாமல் சூழ்ந்தவளாம்

23. சூழ்ந்தவளும் சுத்தமெனும் சுழற்சி ஒளி நதியாக
ஊர்ந்தேதான் உள்ளமெலாம் ஒளியெனும் தீபமதாய்
வாழ்ந்தவளே வானமெலாம் வாடாமல் நின்றவளே
தாழ்ந்தவளே தன்னுள்ளே தத்துவமாய் பூத்தவளே

24. பூத்தவளே பாசமெலாம் பவளமாய் மாற்றினவள்
சாத்தியமாய் சிவமதனில் சாந்தியதை ஊற்றியவள்
ஏத்தவளே எழுச்சியெனும் இழைதனில் நின்றவளே
மூத்தவளே மௌனமெனும் முத்திரையைக் காட்டினளே

25. முத்தி எனும் மௌனத்தில் மூலமாய் நின்றவளே
சித்தி எனும் சுடரொளியில் சிந்தைதனை ஆட்கொள்ள
புத்தி எனும் பூரணத்தில் பாசத்தை மாற்றி நின்று
சிவத்திலுறை தத்துவமாய் நிலையாக ஊற்றினளே

26. ஊற்றி நரம்பினுக்குள் ஒளியெனும் நாதமெலாம்
மாற்றி மனதினுக்குள் மாயையைச் சிதைத்தவள்தான்
ஆற்றி அகமெலாம் கருணைமழைப் பொழிவித்து
தோற்றி விழிப்பதனில் சுத்தசக்தி ஆனவளே

27. சுத்த நதி சுழற்சி வழி சூரியன் போல பாய்ந்தேதான்
முத்த நதி மூலத்திலே மௌனமாய் நின்றவளே
சித்த நதி சிந்தையினில் தீபமதாய் பரவியவள்
புத்த நதி பாசமெலாம் பூரணமாய் மாற்றினவள்

28. பூரணி பாசமெலாம் பொலிவென மாற்றினவள்
சாரணி சிந்தையினில் சாந்தியை ஊற்றியவள்
வாருணியே வானமெலாம் வாடாமல் சூழ்ந்தவளே
ஆரணியாய் அகமெலாம் ஆனந்தம் செய்தவளே

29. ஆனந்தப் பெருவெளியில் அகமெலாம் நனைத்தவளே
ஞானத்தின் ஒளியதனில் நாதமாய் தோன்றியவள்
தானந்தப் பரவசத்தில் பாசமாய் தோன்றிட்டே
ஊனந்தம் உளமெலாம் ஒளியெனச் சூழ்ந்தவளே

30. சூழ்ந்தவொளி சுத்தமெனும் சூரியனாய் நெஞ்சமெலாம்
ஊழ்ந்தவொளி உள்ளமெலாம் மழையெனவே நனைவித்து
வாழ்ந்தவொளி வானமெலாம் வாடாமல் பரவியவள்
தாழ்ந்தவொளி தன்னுள்ளே தத்துவமாய் மலரந்தனளே

31. மலர்ச் சொரியும் வனத்தினிலே மனமெலாம் நனைவித்து
அலர்ச்சி எனும் ஆனந்தம் அகமெலாம் ஆட்கொள்ள
விலர்ச்சி எனும் விழிப்பதனில் வீசிய ஒளியதனால்
கிளர்ச்சி எனும் சிந்தையதில் சுத்தநெறி தந்தவளே

32. தூயநெறி சிந்தையினில் சுடரொளியாய் வீசியவள்
மாயநெறி மாறினவள் மனதினைச் சீராக்கியவள்
ஆயநெறி அகமெலாம் ஆனந்தம் செய்தவளே
ஓயாமல் நரம்பினுக்குள் நாதமாய் தோன்றினளே

33. நாத வாடிவானவளே நல்லவளே கண்ணம்மா
ஓதம் போல் ஓடுகின்ற என் உள்ளம் உனக்கென்றாம்
சீதம் போல் சாந்தமாய் சிரிக்கின்ற கண்களிலே
கீதம் போல் பரவசமாய் பாய்ந்திடுவாய் என்னுயிரே

34. உயிரதுவாய் உளமெல்லாம் ஒளியென பரவினளே
செயலதுவாய் சிந்தையினில் சுடரொளியாய் வீசியவள்
மெய்யான மௌனமெனும் முத்தியிலே நிலைப்பவளே
நரம்பினுக்குள் நாதாந்தம் நவின்றிடவே வந்தவளே

35. நவிலத் தகுமோ நரம்பினுக்குள் நாதமாய் தோன்றி
கவிலத் தகுமோ கருணையெனும் கன்னிகையை
பவிலத் தகுமோ பரவசப் பாசமாய் வந்தவளை
சுவிலத் தகுமோ சுத்தமெனும் சூரிய ஒளியவளை

36. சூரிய நாடிவழி சுழற்சி வழி சுத்தமதாய்
மாரியெனும் மாயமெலாம் மாற்றியெழும் ஒளியவளே
தாரகமாய் தத்துவத்தின் தாழ்வினைகள் நீக்கியவள்
பாரமெனும் பாசமெலாம் பஞ்சாகச் செய்தவளாம்

37. பாசமாய் பரிவாய் வந்து பவளமாய் நெஞ்சில் நின்று
நேசமாய் நரம்பினுக்குள் நாதமாய் ஒலித்தவளே
தேசமாய் சிந்தையினில் தேவி எனத் தோன்றினளே
வாசமாய் வாழ்வெலாமும் வானமாக விரிந்தனளே

38. வனத்திடை மரம் போல வாழ்வெலாம் நிழலளித்து
தனத்தினில் சாந்தமெனும் தாரமாய் நின்றவளே
இனத்திடை ஒளியதனால் ஈரமாய் நனையச் செய்து
மனத்தினில் மௌனமெனும் முத்தமாய் மலர்ந்தவளே

39. மலர்கின்ற மலரதுவாய் மனமதுவும் மணம்பெறவே
அலர்கின்ற ஒளியதனால் அகமெலாம் ஆட்கொண்டு
துலர்கின்ற சிந்தையினில் தூய்மையை பரவவிட்டு
விலர்கின்ற மாயமெலாம் வீசியுள்ளே ஒளிர்பவளே

40. வீசிய நிலவொளியில் வியப்பெனும் சாந்தமுடன்
பேசிய நாதமெனும் ஒளியதனால் நெஞ்சமதில்
பாசமெனும் பனிமூட்டம் பரிவெனவே மாற்றிட்டே
தேசமெனும் தத்துவத்தில் தேவி என மலர்ந்தனளே

41. மலர் கரத்தால் மனமதனை ஆட்கொண்ட என்னவளும்
அலர் முகத்தால் ஆனந்தம் பரவிடவே செய்தனளே
கடை விழியில் சிந்தையதைத் தூய்மையாக்கி என்னுள்ளே
முப்பொழுதும் நாதமதாய் நிமிர்ந்தெழுந்த ஒளியானாள்

42. எழுகின்ற ஒளியதனால் எண்ணங்கள் துளிர்வித்து
விழுகின்ற மனதினுக்குள் சாந்தமெனும் வித்திட்டு
தழுகின்ற நரம்பினுக்குள் தத்துவத்தை மலரத்திட்டே
பழுகின்ற பாசமெலாம் பரிவெனவே காப்பவளே

43. பரிவுடனே பாசமெலாம் புனிதமாய் மாற்றினவள்
கருணையெனும் கதிரொளியில் கனிவென நின்றனளே
சுருதியெனும் சுழற்சியிலே சுத்தமாய் தோன்றிட்டே
திருவெனும் சிந்தனையில் திகழ்வதாய் விளங்கினவள்

44. திகழ்கின்ற திருவுள்ளம் சிந்தையில் ஒளியாக
அழகான சாந்தமெனும் அலைகளாய் பரவியவள்
மழலையாய் நெஞ்சினிலே மௌனமாய் நின்றவளே
பரிவென்னும் நிழலினிலே பாசமாய் மலர்ந்தவளே

45. நிழலெனவே தொடர்கின்ற பவமதனை போக்கிடவே
அழலெனவே சுடரொளியில் அகமெலாம் சுத்திக்க
தழலெனவே சிந்தையினில் தத்துவத்தை விளக்கிடவே
குருவெனவே மனத்தினிடை மௌனமாய் நின்றவளே

46. மௌனமதே பதிலென்று விரதமதைக் கொண்டவரின்
இடபாகம் கலந்த பொன்னே அகமெலாம் ஆட்கொள்ள
ஒளிவெளியாய் எம்முள்ளே அடங்காதப் பெருவெளியாய்
ஆனந்தச் சிந்தனையிலே தேவி எனத் திகழ்பவளே

47. திகழ்கின்ற திருவடிவில் புகழ் பெற்ற நாயகியாம்
காஞ்சி நகர் மேவுகின்ற பரமான தாயவளாம்
உரமாக ஊறி நெஞ்சில் திடமாக அமர்ந்தவளாம்
கரம் சேர்த்து அவள்பாதம் பற்றிடுவோம் உய்வதற்கே

48. உய்வதற்கோர் வழியுண்டு அறிந்திடுவாய் நன்னேஞ்சே
மெய்வழியில் மெதுவாக மௌனமாய் செல்லுவதே
செய்வதெல்லாம் சுத்தமென சிந்தையதைச் சீராக்கு
பொய்யில்லா பூரணியை பூரணமாய் காண்பதற்கே

49. காண்பதற்கு கண்கோடி போதாது போதாது
மாண்பதனை பகர்ந்திடவும் நாவதனால் ஆகாது
ஊனதுவாய் உரைந்திருக்கும் தாயவளின் வடிவழகை
யானெதுவாய் பகர்ந்திடுவேன் வாக்கதுவும் அவள்தானே

50. வாக்கதனை தந்திட்டே தீக்கதிராய் ஒளிர்விப்பாள்
போக்கதனை மாற்றமல் ஏற்றமதை நல்கிடுவாள்
ஆக்குகின்ற செயலெல்லாம் அன்னையவள் லீலையன்றோ
அவளுரையும் ஊரதற்கு காஞ்சியென பெயரன்றோ

51. ஊர் எனும் உள்நிலத்தில் பெயர் எனும் பரவலாக
ஓர் ஒளியாய் நிமிர்ந்தவளே நாதமதாய் உருக்கொண்டு
சீர் எனும் செயல்களிலே சிந்தை எனும் சாந்தமுடன்
தாரமெனத் திகழ்பவளே தத்துவத்தின் பேரொளியே

52. ஒளியளிப்பாள் வளம் பெறவே வாக்கினிலே வந்துதித்து
வழியெமக்கு வாழ்வினிலே கருணையினால் காட்டிடுவாள்
மாற்றிடுவாள் வினயதனை ஆனந்தப் பெருவெளியாய்
ஆக்கிடுவாள் சிவமெனவே திருவான தாயவளும்

53.தாயவளும் அருளளிக்க தழுவிடுவாள் நெஞ்சமெலாம்
மாயமெனும் மறைபடையை மாய்த்திடுவாள் ஞானமதால்
நவிலத்தகும் நாயகியின் திருவுருவை சிந்திக்க
பெருவெளியில் பரிபூரணமாய் நிறைத்திடுவாள் தாயவளும்

54. பூரணியாம் பரமசக்தி புவியெலாம் காத்திடுவாள்
சூரரெனும் கொடுங்கூட்டம் தோளடித்துத் தாழ்த்தியவள்
வீரமெனும் ஒளியாலே வியப்புறவே சஞ்சலிப்பாள்
ஆரணங்கள் புகழ்கின்ற அழகியென முன்நிற்பாள்

55. முன்வந்து அருளளிக்க முளைத்திடுவாள் நெஞ்சமெலாம்
துன்பங்கள் நீங்கிடவே தூய்மையாய் புலப்படுவாள்
புன்பட்ட பாவங்கள் பொலிவாக மாற்றிடுவாள்
இன்பத்தின் விளையாடல் எங்கெங்கும் நிகழ்த்திடுவாள்

56. நிகழ்கின்ற செயலெதற்கும் புகழ் சக்திக் காரணமே
அவளாலே இயங்குகின்ற அகிலமதும் ஒளிர்கிறதே
வழிகாட்டும் ஞானமெலாம் வானகத்தில் பரவிடுமே
திகழ்கின்ற திருவுருவம் சிந்தையினில் நிலைபெறுமே

57. பெருவதெல்லாம் அவளருளே தருவதெல்லாம்
அவளுருவே கருவாக்கி உருவாக்கி கனிந்திடும் ஞானமெலாம்
திருவுருவச் சிந்தையினில் தெளிவாகப் புலப்படுமே
அருள்வழியில் ஆனந்தம் அகமெலாம் பரவிடுமே

58. பரவிடுமே நாடி வழி பாய்ந்தாங்கே ஓடிடுமே
கோடிகோடி உயிரதனில் உட்பொருளாய் கலந்திடுமே
மோனநிலை கூடிட்டால் மோகனச் சுந்தரியின்
ஓட்டத்தை காண்பதும் எளிதாமே எளிதாமே

59. எளிதாம் உணர்வதற்கே எளிமையாய் நெஞ்சமெலாம்
அளவில்லா ஆனந்தத்தை அகமெலாம் நனையிடுமே
ஒளியதனில் ஓட்டமெலாம் ஓரமாய் சுழன்றிடுமே
திருவுருவம் சிந்தையினில் தெளிவாகப் புலப்படுமே

60. புலம் பெயர தாயவளும் உரகமதாய் ஊர்ந்தேதான்
குலம் சேர ஏறிடுவாள் குலபதியைக் கலந்திடவே
மலமதுவும் தீர்ந்த பின்னே மாயத்திரை விலகுமான்றோ
அக்கணத்தில் கண்டிடலாம் என்னவளின் முழுவுருவை

61. நிலவொளியாய் உதித்தாங்கே முகிழ்நகையாள் ஆட்கொள்வாள்
முனைப்பின்றி கிட்டிடுமோ இப்பேறும் யாவருக்கும்
மானுடமே கேட்டிடுவாய் மாதரசி குலம் சேர
மாதவங்கள் தேவையில்லை மாதா என விளித்திட்டதே

62. விளித்தவுடன் வரமளிக்கும் வியப்பான தாயவளும்
தெளிந்திட்ட சிந்தைதனில் வந்துதிப்பாள் ஒளியாக
மயக்கங்கள் விலகிடவே மாயத்திரை கிழித்திடுவாள்
அக்கணத்தில் மறைப்பில்லா அருள்வழியும் திறந்திடுமே

63. வழி முழுதும் ஒளியதுவும் வானகத்தில் பரவிடுமே
எழில்மிகு காந்தியினால் நெஞ்சமெலாம் ஒளிபெறுமே
தழல்போலும் சுடரொளியில் தானாகவே தெளிவாகும்
வழிநெடுகப் பயணமதும் ஆனந்தமாய் நிறைந்திடுமே

64. நிறைந்த அந்த நெஞ்சமெலாம் நிம்மதியாய் ஒளிர்ந்திடுமே
திறந்திடுமே சிந்தையினில் தீபமெனும் அருட்பொலிவே
பரந்திடுமே புவியெலாம் பாசமெனும் பரவசமே
உணர்வெலாம் அருள் வழியாய் அகமெலாம் மலர்ந்திடுமே

65. அகமதுவும் குளிர்ந்திடவே அருளொளியால் நெஞ்சமெலாம்
முகில்போலச் சாந்தியுடன் மூடியிடும் எண்ணமெலாம்
திகழ்வதொரு தீபமென சிந்தையினில் எழுந்திடுமே
அவளருளின் ஓட்டமெலாம் அலைபாயும் நாதமெலாம்

66. பாயுமொளி எந்தனுக்குள் பரவசமாய் பரந்திட்டே
தூய்மையுடன் சிந்தையினில் துளிர்விடும் உணர்வெலாம்
அருள்திரையில் எழுமொலியாய் அகமெலாம் இசைக்கின்ற
நாதநெறி ஆனதுவும் அழகியாய் அமைந்தவளே

67. நெறியதுவும் தெரியாமல் குறியதுவும் இல்லாமல்
தறியதனில் நூல்போல தொடர்கின்ற பிறவிகளும்
கரியதனின் உரிபோர்த்தும் நாயகரின் மனையாளை
அறிகின்ற அத்தினமே அகலுமன்றோ அவளருளால்

68. அருளெல்லாம் அவள்தானே அகத்துள்ளும் அவள்தானே
மருளெல்லாம் விலகிடவே மாயத்திரை கிழித்திடுவாள்
உருவமாய் உணர்வதற்கே உள்ளமதை திறந்திடுவாள்
அழகியாய் அமைந்தவளே ஆழமெனும் நெறியதுவாய்

69. ஆழமாய் அறிந்ததெவர் அமுதவல்லி பாதமதை
குவிமுலையாள் திருந்தாளும் தெளிவாகத் தெரிவதொன்றா!
ஆனாலும் நம்பொருட்டு அவள் வருகை விந்தையன்றோ
தேனாலும் பாலாலும் நனைந்திடுவோம் தாளதனை

70. தாளாதத் துயரமதும் மாளாத வினையதுவும்
தக்கனவன் மகளவளின் தாள் சேரத் தீருமன்றோ
ஆதலினால் சேர்ந்திடுவோம் அபிராமவல்லி பதம்
ஆதரவும் அரவணைப்பும் கிட்டிடுமே அவ்விடத்தில்

71. விடமுண்ட நாயகரின் குரல்வளையை பிடித்தழுத்தி
அண்டங்கள்தனை காத்த ஔடதமும் நீயன்றோ
வினையென்னும் பெருபிணியை வேறருக்க கரமருவாய்
துணைவருவார் யாருமில்லை எமக்கிந்தக் காசினியில்

72. காசினியில் நின்றவளே கருணையெனக் கதிர்விடுவாள்
ஆசையெனும் பாசமெலாம் அருளெனவே மாற்றிடுவாள்
சந்ததமாய் சிந்தையினில் சாந்தியெனும் நிம்மதியை
தேசமெலாம் தருவிப்பாள் தேவியெனும் தூய ஒளி

73. ஒளியெனும் பெருவுருவில் கலிதீர வந்துதித்து
அகமெலாம் அமைதியதே வழிந்திடவே செய்திட்டு
வினையெனும் பிணியதனை விலக்கிட்ட நாயகியே
பரமனுடன் இணைந்தவளே பார்வதியே சரணமம்மா

74. சரண்புகுந்த அடியாற்கு விண்ணுலகும் தருமந்த
இருதாள்கள் பிடித்திட்டேன் இருமைகள் அன்றிடவே
அகலாத நிலைவேண்டி அழைக்கின்றேன் நித்தனையே
அகம் குளிர பாராயோ அன்னைமடி தாராயோ

75. மடிமீது அமர்த்தியெனை மகனேயென்றழைத்திட்டால்
மனதிற்கோர் குறைவருமோ முத்துப்பல் உதிர்ந்திடுமோ
ஏனின்னும் தாமதமோ என்னயழைக்க நிந்தனுக்கு
சீக்கிரமாய் எனையழைத்து சிவானந்தம் நல்கிடுவாய்

76. சிவசித்தம் எனதுவென்று எந்தனுக்கு உரைத்திடவே
அறிவொளியாய் பரந்ததனால் அகமெலாம் தெளிவதுவே
மருளெனும் இருள் விலக மனமெலாம் நிம்மதியே
அவளருளால் ஆனந்தம் அழிந்திடா நிலைமையதே

77. நிலையதனை உயர்திடுவாள் நெறியதுவும் உணர்த்திடுவாள்
சிந்தையினில் நிம்மதியை மலர்ந்திடுவாள் குறையாமல்
விலகிடுமே வினையதனால் அகமெலாம் ஒளிபெறுமே
அழகியாய் அமைந்தவளின் பாதமதும் அருள்பரப்பும்

78. பரவெளியில் பரந்தவளாய் பரமொளியாய் நின்றவளே
அண்டமெலாம் ஆட்கொண்டு அகமெலாம் நிரப்பிடுவாள்
சந்ததமாய் சிந்தையினில் சாந்தியெனும் நிம்மதியே
அவளருளால் ஆனந்தம் அழியாத நிலைமையதே

79. நிலைமையதும் கிட்டிடுமே உயர்வாக அவளருளால்
அகமெலாம் ஒளிர்ந்திடவே அண்டமெலாம் அமைந்திடுமே
சிவசித்தம் மலர்ந்திடவே சிந்தையினில் சாந்தியதே
பொங்கிடுமே என்றென்றும் அழியாத ஆனந்தம்

80. அழியா விரதர்தன் மனையாளே கேட்டிடுவாய்
அருளொளியே அகமெலாம் அமைதியெனும் நிலையுடனே
வினையெனும் பிணியதனை விலக்கிடும் நாயகியே
சிவசித்தம் எனதென்று சிந்தையினில் உரைத்திடுவாய்

81. உரைத்திட்ட அக்கணமே உள்ளம் துளிர் பரவிடவே
மருளின் பிணை சிதறிடவே மனசுழற்சி நின்றிடவே
பரந்திடும் சோதியென பாசமெனும் நெறி தெளிவாய்
ஒளி வடிவாய் என்னுள்ளே தெளிவான வழிகாட்டு

82. வழிகாட்டும் குருவெனவே மனவெளியில் நின்றவளே
பரிவோடு சொற்கள்சொல பசுமைதரும் உணர்வதுவே
மருள்கடந்து நெறி தெரிந்து மலர்கின்ற தெளிவதுவே
அழகியாய் அகத்துதித்து அறிவொளியை விதைத்திடுவாய்

83. விதைத்ததனின் வேராக இருப்பவளும் நீதானே
என்னுள்ளம் முளைத்ததுவே வேரெடுத்து நெறி வளர
விண்மீனாய் விரிந்ததுவே மறைபொருளை நன்குணர
அறிவெனும் நதி போல அழுத்தமாய் ஓடுகின்றாய்

84. ஓடுமோட்டம் ஓய்வதென்று உணர்வெழும் நதிபோலே
வழிகாட்டும் ஒளிவழியில் வேரெடுக்கும் நெறியதுவே
மறைமொழிகள் மிதந்திடவே மனமதுவும் நதியெனவே
தங்காமல் நகர்ந்திடுமே தத்துவத்தின் நுண்மைதனை

85. தனைச் சேர்ந்த மாந்தற்கு புகலிடமாய் இருப்பவளே
நிழலெனும் நெறி போல நெஞ்சினிலே நிலைத்தவளே
மறைமொழிகள் துளிர்த்திடவே மனவெளியில் விரிந்தவளே
அறிவொளியாய் நதிபோல அழுத்தமாய் பாய்ந்தவளே

86. பாய்ந்து வரும் கங்கையதாய் பரிசுத்தம் பரப்பிடுவாள்
நெஞ்சமதும் நனிபெறவே நெறியெனும் ஒளி வீசி
மறைமொழிகள் நன்கொலிக்க மனவெளியில் நின்றிடுவாள்
தன்னிலைத் தெளிவதற்கே தடையின்றி நகர்ந்திடுவாள்

87. நகரத்தில் நமைச்சேர்க நங்கையவள் உடன்வருவாள்
பாதையெனும் ஒளிக்கதிராய் பரந்திடும் நெறியதுவாய்
மனவெழுச்சி மலர்ந்திடவே மறைமொழிகள் பேசிடுவாள்
பவமென்னும் கொடும் வெய்யில் தணிக்கின்ற நிழலாக

88. நிழலாகத் தொடருமிந்த வினைக்கூட்டம் வீழ்ந்திடவே
உளமெங்கும் ஒளிர்ந்தவளாய் உணர்வெழுச்சி தந்திடுவாள்
சிந்தையின் ஓரமெலாம் சீரொளியாய் பரந்தவளாய்
நெறியெனும் ஒளிக்கதிராய் நெஞ்சினிலே நிலைத்திடுவாள்

89. நிலைத்திட்டு நீயுமென்னுள் நெஞ்சமெலாம் ஒளிர்ந்திடவே
மறைமொழிகள் உணர்ந்திடவே மனவெளியில் மிதந்திடவே
பாதையெனும் நுண்மையிலே பரந்திடும் சிந்தையதாய்
உணர்வெழுச்சி ஊட்டிடுவாய் உயிரினிலே ஒளிவளையாய்

90. வளைக்கையால் அபிநயமும் காட்டுதாலும் வீனென்று
திருப்பாததூளியதே வேண்டும் வரம் அளித்திடவே
கைகொடுத்து எமைத்தூக்க மறந்தனையோ மெல்லியளே
என்குறையும் நின்குறையே ஆதலினால் ஆதரிப்பாய்

91. ஆதரிப்பார் யார்வுளரோ அழகியவள் நீயின்றியே
தாங்கவொணா வினைமுழுதும் தளர்வதெனும் தருணமிதே
பாதையெனும் ஒளிக்கதிர்கள் பார்வையினில் மறைந்திடவே
உயிரினிலே நிழலெனவே உறைந்தவளே நினைவாயே

92. நினைவாலே வாடுகின்றேன் நெஞ்சமெலாம் நெருப்பதுவாய்
மறைந்தவளே நீயின்றி மனவெளியில் மிதக்கின்றேன்
பாதையெனும் ஒளிக்கதிர்கள் பார்வையினில் சிதைந்திடவே
உயிரதனுள் பதிந்தவளே அருளாயோ எந்தனுக்கே!

93. கேள்வரவர் இடபாகம் கலந்த பொன்னே நீயன்றி
உணர்வெழுச்சி ஏதிங்கே உயிரினிலே வாடுகின்றேன்
பாதையெனும் நுண்மையிலே மறைந்தவளே அருளெனும்
ஒளிக்கதிராய் அகம் சேர்ந்து எம்முள்ளே நிலைத்திடுவாய்

94. எம்முள்ளே நுழைந்திட்டே தொடர்கின்ற நிழலெனவே
அருவுருவ நாதமென அகமெங்கும் பரந்தேதான்
சிந்தையதன் பாதையெல்லாம் சீரொளியாய் விரிந்தெமக்கு
தத்துவத்தை தந்திடுவாய் தாயே நீ வாழியடி

95. அடி சூழ்ந்த தேவருக்கும் மூவர்க்கும் அருளதனை
ஈந்தவளே கடிமனமும் ஏனோசொல் என்னிடத்தில்
செய்திட்ட பிழையதனை மன்னித்து அருளுகவே
தாய்மைக்கு அழகதுவே ஆதலினால் எமையேற்பாய்

96. பாயுமொளி நீதானே எனக்குள்ளே என்றென்றும்
நிலைத்திடும் நெஞ்சமெலாம் நிம்மதியாய் நனைந்திடவே
அறிவொளியின் ஆழமென அகத்திலே விரிந்தவளே
பரமான நுண்மையென தழைத்தவளே அருளாயோ

97. தழைத்தென்னுள் ஆல்போல வளருகவே முப்போதும்
அறிவொளியின் ஆழமென அகத்திலே விரிவாகச்
சுழல்கின்ற உயிரோட்டம் சுடரெனவே பரந்திடவே
ஒளிப்புனலாய் எம்முள்ளே தங்கி நீயுமருளாயோ

98. தங்கு கங்கை சடையாரின் மங்காத மாட்சிமையே
அருள் வெள்ளவோட்டமென அமுதமாய்ச் சுழல்கிறதே
நெஞ்சமெலாம் நிறைந்தவளே நிர்மலையே நீயன்றி
உயிரினிலே ஒளியதுவும் ஏதிங்கே சக்தியளே

99. சக்தி சக்தி சக்தியென்று முப்போதும் ஏத்திட்டால்
முக்தியதும் கைச்சேரும் எத்திக்கும் செல்லாமல்
வாக்கிற்கு எட்டாத எழிலுருவாம் சோதியதை
சரிபாதி வடிவினிலே காட்சியதும் கண்டிடலாம்

100. கண்ட காட்சி மாறாமல் நிலைத்திருக்க வழியுண்டு
கவனத்தை மூச்சதனில் கலந்திட்டால் போதுமன்றோ
அத்தன்மடி அமர்ந்த பொருள் அப்படியே விளங்கிடவே
தப்பாமல் யோகமதை கைக்கொள்வோம் மூலமதாய்

|| நூற்பயன் ||

மூலத்தில் உறைபவளை முக்கண்ணின் ஒளியாக
சீலத்தில் திகழ்பவளை சித்தர்கள் தேடிச்சேரும்
பாதத்தைச் சேர்ந்திடவே பரமான வழி பகன்ற
வார்தைகளை படிப்போற்கு பவமில்லை ஐயமுண்டு

~ சிவம் ~